# கேள்வி அறிவித்தல் - மன்னார் நகர சபை
# பாவனையற்ற வாகனங்களினை இரும்பு விலைக்கு விற்பனை செய்தல்
# கேள்வி இல : NP/14/42(2)/VEH/AUC/2024

01. மன்னார் நகரசபையில் பாவனையற்று வாகன பதிவு இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் வாகனங்களை இரும்பு விலைக்கு விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | வாகன இலக்கம் | வாகனத்தின் வகுப்பு | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது | Tractor ( *49 - 1445* ) | Rs. 3,500.00 | Rs. 32,500.00 |
| 02 | பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது | Tractor ( 49 – 1444 ) | Rs 3,500.00 | Rs. 35,000.00 |
| 03 | பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது | Tractor Trailer ( EPHI 6287) | Rs. 1,000.00 | Rs. 5,000.00 |
| 04 | பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது | Tractor Trailer ( EPHI 6276 ) | Rs. 1,000.00 | Rs. 7,500.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 25.10.2024 – 12.11.2024 செவ்வாய் கிழமை பி.ப 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 25.10.2024 – 12.11.2024 செவ்வாய்கிழமை பி.ப 14.30 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 12.11.2024 செவ்வாய்கிழமை பி.ப 14.30 மணி

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும், எழுத்து மூலமான கோரிக்கையுடன், மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூபா 1000.00 வையும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணத்தையும் அலுவலக நாட்களில் நகரசபை, மன்னார் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 2024.10.25 ஆம் திகதி தொடக்கம் 2024.11.12 ஆம் திகதி வரை மு.ப 09.30 மணி தொடக்கம் பி.ப 02.30 மணி வரை மன்னார் நகரசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பார்வையிடலாம்.

04. ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கேள்விப் பத்திரம் மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் - வாகனத்தின் வகுப்பு ………………."** எனக் குறிப்பிட்டு 2024..11.12 ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, நகரசபை மன்னார் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது மன்னார் நகரசபை அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியுனுள் நேரடியாக இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

06. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**2024.10.25**

எஸ்.லோகேஸ்வரம்,
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
நகரசபை, மன்னார்.

CamScanner